අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

# க.பொ.த சாதாரண தரம் 2022 (2023)

## உதவிக் கருத்தரங்கு வினாத்தாள்

# வணிகக் கல்வியும் கணக்கீடும்

## வினாத்தாள் I & II




The National e-learning Portal for The General Education

Nenasa

தொலைக்கல்வி மேம்பாட்டுக்கிளை - கல்வி அமைச்சு

முழுப் பதிப்புரிமையுடையது |All Rights Reserved

தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

**கல்வி அமைச்சு**

| 60 | T | I, II |
|---|---|---|

## தொலைக்கல்வி மேம்பாட்டுக் கிளை

## க.பொ.த சாதாரண தரப் பரீட்சை - உதவிக் கருத்தரங்கு 2022 (2023)

| வணிகக் கல்வியும் கணக்கீடும் - I, II | நேரம் : 3 மணித்தியாலம் |
|---|---|
| **மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்** | வினாக்களை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக. |

### வணிகக் கல்வியும் கணக்கீடும் - I

**அறிவுறுத்தல்கள்**

* 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
* உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.
* அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுத்தல்களையும் கவனமாக வாசித்து பின்பற்றுக.

- பின்வரும் சம்பவத்ததை அவதானித்து 1 தொடக்கம் 5 வரையான வினாக்களுக்குவிடை எழுதுக.
போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக வலிகாமம் கல்வி வலயத்தினூடாக கலைமகள் வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் துறைசாருந்த நிபுணத்துவம் பெற்ற வைத்தியர்கள்,உளவளத்துறை ஆலோசகர்களின் பங்களிப்புடன் பாட-சாலை மாணவலர்களுக்கு விழிப்புணர்வு கலந்துரையாடல் ஒன்று நவீன தொழில்நுட்ப உதவியுடன் இடம் பெற்றது.

1. மேற்படி சம்பவத்தில் இனம்காணப்படும் மனித தேவையாக கருதப்படுவது
(1) உணவு (2) உடை (3) பாதுகாப்பு (4) பொழுதுபோக்கு

2. வலிகாமம் கல்வி வலயம் எவ்வகையான வணிக அமைப்பைச் சார்தது
(1) அரச திணைக்களங்கள் (2) ஆரச கூட்டுத்தாபனங்கள்
(3) தனியார் வணிகம் (4) பங்குடமை

3. பாடசாலை பிரதான மண்டபம் பாடசாலை சார்பில் எத்தகைய உற்பத்திக் காரணிக்குள் உள்ளடங்குகிறது
(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சி

4. பின்வருவனவற்றில் சேவை உற்பத்தி வணிகமாக கருதப்பட முடியாதது.
(1) கலைமகள் வித்தியாலயம்
(2) வலிகாமம் வலயக்கல்வி அலுவலகம்
(3) நவீன தொழில்நுட்ப உபகரண உற்பத்தி வணிகங்கள்
(4) துறைசார்ந்த நிபுணத்துவ சேவை வணிகங்கள்

5. மேற்படி சம்பவத்தில் தொடர்புபடாத தொடர்பாடல் முறையாகக் கருதப்படக் கூடியது
(1) சமிஞ்ஞைகளும் குறியீடுகளும் (2) வாய்மொழி ஊடகங்கள்
(3) எழுத்து மூல ஊடகஙடகள் (4) இலத்திரனியல் ஊடகங்கள்

- **பின்வரும் சம்பவக் கற்கையினைப் பயன்படுத்தி 6,7 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**
சாந்தினி தனது கிராமத்தில் பெருமளவில் உற்பத்தி செய்யப்படும் சணலினை விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்து இதனை மூலப்பொருளாக பயன்படுத்தி பெண்களுக்கான அழகிய கைப்பைகளை தயாரித்து சில்லறை வியாபார நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகிறார்.

6. மேற்படி சம்பவத்தில் சாந்தினி வணிகத்தின் வழங்குனராக கருதப்படக் கூடியவர்
(1) பெண்கள் (2) விவசாயிகள் (3) சில்லறை வியாபார நிறுவனங்கள் (4) சாந்தினி

7. மேற்படி வணிகத்திலிருந்து வாடிக்கையாளரால் எதிர்பார்க்கும் விடயமாக அமைவது

(1) ஈடுபடுத்திய மூலதனத்தை பாதுகாத்தல்

(2) தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளல்

(3) தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ளல்

(4) தரமான உற்பத்திப் பொருட்களை நியாயமான விலையில் பெறல்

8. இலங்கையில் தற்போது எரிபொருள் பாவனையை ஒழுங்குபடுத்த மற்றும் குறைப்பதற்காக QR Code முறைமை பின்பற்றப்பட்டு வருகிறது. இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் புறச்சூழல் காரணி விசையாக அமைவது

(1) இயற்க்கைச் சூழல் (2) தொழில்நுட்பச் சூழல் (3) பூகோளமயச் சூழல் (4) சுட்டச் சூழல்

9. கீழே X நிரலில் வணிக அமைப்புக்களும் Y நிரலில் அவ் வணிக அமைப்புக்களுடன் தொடர்புபடும் சட்டங்களும் தரப்படுகின்றன.

| வணிக அமைப்புக்கள் X | தோடர்புபடும் சட்டங்கள் Y |
|---|---|
| 1. மலரவன் பல்பொருள் வாணிபம் | A. 2007 ஆம் ஆண்டு 7 ம் இலக்க கம்பனிச் சட்டம் |
| 2. சண்முகம் அன் சன்ஸ் | B. 1972 ஆம் ஆண்டு 5ம் இலக்க கூட்டுறவுச் சட்டம் |
| 3. வரையறுத்த சக்தி கம்பனி | C. வணிக பெயர் பதிவு கட்டளைச் சட்டம் |
| 4. கின்னியா பலநோக்க கூட்டுறவு சங்கம் | D. மோசடிகள் தவிர்ப்பு கட்டளைச் சட்டம் |

மேற்படி வணிக அமைப்புக்களுக்க பொருந்தும் வகையில் தொடர்புபடும் சட்டங்களை இணைக்கும் போது சரியாக அமையும் விடைத்தொகுதி

(1)A,C.D,B (2) A,B,D,C (3) C,D,A,B (4) C,D,B,A

10. மொத்த சில்லறை வியாபாரத்தின் பண்புகள் சில கீழே தரப்படுகின்றன

A. இறுதி நுகர்வுக்காக பொருட்கள், சேவைகள் விற்பனை செய்யப்படல்

B. பெருந்தொகைப் பொருட்கள் விற்பனைக்கு கானப்படல்

C. பல்வேறு பட்ட பொருள் வகைகள் காணப்படல்

D. பொதுவாக அலகுக்கான விற்பனை விலை குறைவாகக் காணப்படல்

E. வியாபாரக் கழிவுகள் வழங்கப்படல்

மேற்கூறிய பண்புகளில் மொத்த வியாபாரத்தின் பண்பை மட்டும் கொண்ட விடைத் தொகுதியை தெரிவு செய்க.

(1) A,C,D மட்டும் (2) C,D,E மட்டும் (3) A,B,E மட்டும் (4) B,D,E மட்டும்

11. இலங்கை வங்கியில் நடைமுறைக் கணக்கை உடைய ராகுலன் என்பவர் மக்கள் வங்கியின் நடைமுறைக்கணக்கு வாடிக்கையாளரான வாகீசன் என்பவருக்கு காசோலை ஒன்றை வழங்கினார்

இச்சம்பவத்தில் குறிப்பிடப்படும் காசோலை தொடர்பில் வரையுனரையும் பணம் பெறுபவரையும் முறையே எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவு செய்க

(1) ராகுலன்,இலங்கை வங்கி (2) வாகீசன்,ராகுலன்

(3) மக்கள் வங்கி, வாகீசன் (4) ராகுலன்,வாகீசன்

12. பின்வருவனவற்றுள் காப்புறுதி தொடர்பான பிழையான கூற்றைத் தெரிவு செய்க

(1) ஆதனக்காப்புறதியில் ஏனைய அனுகூலங்களை பெறமுடியாது

(2) கணவனானவர் தனது மனைவியின் ஆயுளில் (உயிரின்) மீது காப்புறுதி செய்ய முடியும்

(3) இழப்பீட்டு தத்துவமானது ஆயுட் காப்புறுதிக்கு பொருந்தும்

(4) ஆயுட் காப்புறுதியில் இடரானது நிச்சயமற்றதாக காணப்படுகின்றது

13. பேரூந்து ஒன்றிற்கான போக்குவரத்தின் அடிப்படைக் கூறுகளை சரியாக காட்டும் விடைத் தொகுதியை தெரிவு செய்க.

(1) பெருந்தெரு, டீசல், பேரூந்து தரிப்பிடம் (2) நீர் வழி, மின்சாரம், துறைமுகம்

(3) ஆகாயவழி, டீசல்,பேரூந்து தரிப்பிடம் (4) பெருந்தெரு, டீசல், விமான நிலையம்

14. 'சக்தி ஆயுள்வேத வைத்திய சேவை நிறுவனம் மூலிகைகளிலான இருமல் மருந்து ஒன்றினை உற்பத்தி செய்யத் தீர்மானித்தது.' இக்கூற்றில் இனங்காணக் கூடிய முகாமைத்துவக் கருமத்தினையும், சந்தைப்படுத்தல் கலவை மாறியினையும் சரியான ஒழுங்கு முறையில் கொண்டுள்ள விடையைத் தெரிவு செய்க.

(1) திட்டமிடலும், மேம்படுத்துதலும் (2) திட்டமிடலும் , உற்பத்திப் பொருளும்

(3) ஒழுங்கமைத்தலும்,விலையும் (4) ஒழுங்கமைத்தலும்,உற்பத்திப் பொருளும்

15. முதலீடுகள் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவு செய்க

(1) முதலீட்டின் நட்ட இடர் அதிகரிக்கும் போது அதன் அனுகூலங்கள் குறைவடையும்

(2) சேமிப்பு வைப்புக்கு நிலையான வைப்பினை விட கூடுதலான வட்டி வீதம் காணப்படுகின்றது.

(3) வணிகமொன்றினைத் தொடங்கி நடாத்தி வருதலை ஒரு முதலீட்டு வழிமுறையாக கருத முடியாது.

(4) பொருளாதார நலனொன்றை எதிர்பார்த்து பணத்தொகையொன்றை வினைத்திறனான வழியொன்றில் ஈடுபடுத்துவது முதலீடாகும்

16. நிதி நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெறும் போது பிணையாக வைப்பதற்கு வசதியளிக்கும் முதலீட்டு வழிமுறையொன்று

(1) சேமிப்பு வைப்பு

(2) கால/ நிலையான வைப்பு

(3) திறைசேரி உண்டியல்கள்

(4) சாதரண பங்குகள்

17. உரிமை என்பதனை சரியாக குறிப்பிடும் கூற்று

(1) நிறுவனத்திலுள்ள சொத்துக்களின் அளவு

(2) நிறுவனத்திலுள்ள தேறிய சொத்துக்களின் பெறுமதி

(3) உரிமையாளர் சார்பாகவுள்ள சொத்துக்களின் அளவு

(4) உரிமையாளர் சார்பாகவுள்ள காசின் அளவு

18. ரூபா 10000 கிரயமான பண்டம் ரூபா 15000 கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது. இதனால் கணக்கீட்டுச் சமன் பாட்டில் ஏற்படுத்தும் சரியான தாக்கம்

(1) சொத்து, உரிமையும் ரூபா 5000 ஆல் அதிகரிக்கும்

(2) சொத்தும் உரிமையும் ரூபா 10000 ஆல் குறையும்

(3) சொத்தும் உரிமையும் ரூபா 5000 ஆல் குறையும்

(4) சொத்தும் பொறுப்பும் ரூபா 5000 ஆல் அதிகரிக்கும்

19. கணக்கீட்டு சமன்பாட்டில் சொத்திலும், பொறுப்பிலும் அதிகரிப்பினை ஏற்படுத்தும் கொடுக்கல் வாங்கல்களை இனங்காண்க.

(1) வங்கித் தவணைக்கட்டணம் செலுத்துதல் (2) கடன்கொடுத்தோருக்கு கொடுத்த காசு

(3) வங்கி கடன் பெற்றுக் கொள்ளல் (4) கடன்பட்டோரிடம் சேகரித்த காசு

20. வரவு அதிகரித்தல் செலவு குறைதலுக்கு குரிய பொருத்தமான கணக்கீட்டு கூறாகஅமைவது

(1) வருமானங்கள் (2) சொத்துக்கள் (3) பொறுப்புக்கள் (4) உரிமைகள்

21. சாந்தன் 01.05.2022 இல் 30000 கிரயமான பண்டங்களை மாறனுக்கு விற்பனை செய்தது எனில் சாந்தனின் ஏட்டில் பயன்படுத்தப்படும் மூல ஆவணம்

(1) விற்பனைப் பட்டியல் (2) கொள்வனவுப்பட்டியல்

(3) கைச்சாத்து (4) நாட்குறிப்ப கைசாத்து

22. கொடுக்கல் வாங்கல் ஒன்றின் இரட்டைப் பதிவு பின்வருமாறு அமைந்தது

வங்கி கடன் கணக்கு – வரவு 20000

காசுக் கணக்கு - செலவு 20000

பொருத்தமான கொடுக்கல் வாங்கல்களை இனங்காண்க.

(1) வங்கியில் பெற்ற கடன் ரூபா 20000

(2) செலுத்திய வங்கிக்கடன் வட்டி ரூபா 20000

(3) மீளத்திருப்பி செலுத்திய வங்கிக்கடன் ரூபா 20000

(4) பெற்ற வங்கிக்கடன் ரூபா 20000 மூலம் பொருள் கொள்வனவு

23. சில்லறை காசாளன் 01.01.2022 இல் சில்லறை காசு மீதியாக ரூபா 500 உம் 01.02.2022 இல் சில்லறைக் காசு மீதியாக ரூபா 2500 உம் கொண்டிருந்தார் ஆனால் ஜனவரி மாதத்திற்கான சில்லறை செலவு ரூபா 1500 ஆகும். ஒவ்வொரு மாத ஆரம்பத்திலும் மீள் நிரம்பல் இடம் பெறும் எனின் பெப்ரவரி 2022 இன் வசக்கட்டு நிதி எவ்வளவு

(1) ரூபா 1500 (2) ரூபா 2500 (3) ரூபா 4000 (4) ரூபா 3000

24. வங்கிக் கூற்றில் செலவுப்பக்கத்தில் காணப்படும் உருப்படிகள்
(1) வங்கி அறவீடு (2) மாற்றப்பட்ட காசோலை
(3) நிலையான கட்டளை காப்புறுதி (4) நேரடி வைப்புக்கள்

25. ராம்கி வணிகத்தின் மே மாதத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு.
5.5.2022 இல் சேரனுக்கு விற்பனை 40000 வியாபாரக் கழிவு 10%
14.5.2022 இல் உடன் காசுக்கு விற்பனை 20000
24.5.2022 இல் சேரனிடம் பெற்ற காசு 22000
மே மாதத்திற்கான விற்பனைப் பெறுமதி யாது?
(1) ரூபா 56000 (2) ரூபா 60000 (3) ரூபா 38000 (4) ரூபா 78000

26. விற்பனை நாட்குறிப்பில் மொத்த தொகையை பேரேட்டுக்கு மாற்றுவதற்கான இரட்டை பதிவு எது?
(1) விற்பனை கணக்கு வரவு, கடன்கொடுத்தோர் கணக்கு செலவு
(2) விற்பனை கணக்கு வரவு, கொள்வனவுக் கணக்கு செலவு
(3) கடன்பட்டோர் கணக்கு வரவு, விற்பனை கணக்கு செலவு
(4) கொள்வனவுக் கணக்கு வரவு, கடன்பட்டோர் கணக்கு செலவு

27. பேரேட்டுக் கணக்கொண்றின் வரவு மீதி எடுத்துக் காட்டுவது
(1) வருமானங்கள் அல்லது செலவீனங்களை
(2) பொறுப்புக்கள் அல்லது செலவீனங்களை
(3) பொறுப்புக்கள் அல்லது வருமானங்களை
(4) சொத்துக்களை அல்லது செலவீனங்களை

28. பரீட்சை மீதியில் ......1...... மீதிகளை கொண்ட பேரேடுகள் ....2....... நிரலிலும், ...3.... மீதிகளைக் கொண்டு பேரேடுகள் ......4..... நிரலிலும் பதியப்படும்.
மேற்குறிப்பிட்ட 1, 2, 3, 4 இலக்கங்களிற்கு பொருத்தமான சொல்லை தெரிவு செய்க? (முறையே)
(1) வரவு, வரவு, செலவு, செலவு
(2) செலவு, செலவு, வரவு, வரவு
(3) வரவு, செலவு, வரவு, செலவு
(4) செலவு, வரவு, செலவு, வரவு

29. சிறு செலவுக் காசினை மீள் நிரப்புதல் என்பதனால் கருதப்படுவது
(1) மாதாந்த செலவுகளை மீளளித்தல்
(2) தொடக்க மீதிக்குச் சமமான ஒரு தொகையைச் செலுத்துதல்
(3) முடிவு மீதிக்குச் சமமான ஒரு தொகையைச் செலுத்துதல்
(4) சில்லறைக் காசாளர் கோரும் தொகையைச் செலுத்துதல்

30. வணிக நிறுவனமொன்றின் நிர்வாகச் செலவுகளை மட்டுமே கொண்டுள்ள விடைத்தொகுதியைத் தெரிவு செய்க.
(1) விளம்பரச் செலவு, அறவிட முடியாக்கடன், கொடுத்த கழிவு
(2) கட்டிட வாடகை, காப்புறுதிக் கட்டணம், மின்சாரக் கட்டணம்
(3) வங்கி கடன் வட்டி, வங்கிக் கட்டணம், வங்கி மேலதிக பற்று வட்டி
(4) தீயழிவு நட்டம், கட்டிட வாடகை, விளம்பரச் செலவுகள்

31. மாலதி பெண்களுக்கான ஆடை உற்பத்தி வணிகத்தின் ஜனவரி மாதத்தில் ஏற்பட்ட செலவுகள் வருமாறு.

| | | |
|---|---|---|
| துணி கொள்வனவு | – | 45000 |
| கொண்டு வரல் கூலி | - | 5000 |
| தையல் கூலி | | 30000 |
| உதவியாளர் சம்பளம் | - | 5000 |
| மின் கட்டணம் | - | 3000 |
| வாடகை | | 17000 |

இவ் உற்பத்தி வணிகத்தின் முதற் கிரயமும், தொழிற்சாலை மேந்தலை கிரயமும் முறையே.
(1) ரூபா 105000,ரூபா 25000 (2) ரூபா 80000, ரூபா 25000 (3) ரூபா 25000, ரூபா 80000 (4) ரூபா 25000, ரூபா 105000

32. வான்மதி விளையாட்டுக்கழகத்தில் 60 அங்கத்தவர்கள் உள்ளனர். ஆண்டு சந்தாபணம் ரூபா 1000 ஆகும். இதில் 15 அங்கத்தவரை தவிர ஏனையோர் உரிய காலத்திற்கான பணத்தினை செலுத்தினர். குறித்த நிதியாண்டில் பெறுவன கொடுப்பனவுக் கணக்கில் பதியப்படும் சந்தா தொகை யாது?
(1) ரூபா 60000 (2) ரூ 75000 (3)ரூ 15000 (4) ரூ 45000

33. இலாப நோக்கற்ற வணிகமொன்றின் வருமான செலவுக்கணக்கு தொடர்பான பிழையான கூற்று எது?
(1) வருமானச் செலவுக் கணக்கு அட்டுறு அடிப்படையில் பராமரிக்கப்படும்.

(2) குறித்த காலத்தின் இறுதி மீதி வருமான மிகை அல்லது பற்றாக்குறையாகும்.

(3) மிகை அல்லது பற்றாக்குறை திரண்ட நிதியின் ஒரு பகுதியாகும்.

(4) பெற்ற நன்கொடை வருமானமாக இனங்காணப்படுவதில்லை.

34. வங்கிக் கணக்கொன்றின் செலவு மீதியானது எப்போதும்,

(1) சொத்தாகும் (2) பொறுப்பாகும் (3)உரிமையாகும் (4) செலவாகும்

- 35 – 40 வரையான வினாக்களிற்கு கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க.

பயிற்சி பெற்ற கணக்கு பதிவாளரினால் தயாரிக்கப்பட்ட வருமானக் கூறு வருமாறு.

31.12.2021 இல் முடி ஆண்டு வருமானக் கூற்று

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| விற்பனைகள் | | 220,000 |
| மூலதனம் | | 80000 |
| | | 300,000 |
| 01.01.2021 இல் இருப்பு | 20000 | |
| கொள்வனவு | 110000 | (130000) |
| மொத்த இலாபம் | | 170,000 |
| (+) மு/வருமானம் | | 10000 |
| | | 180,000 |
| (-) 31.12.2021 இருப்பு | 15000 | |
| வாடகை | 3000 | |
| காப்புறுதி கட்டணம் | 5000 | |
| மின் கட்டணம் | 2000 | |
| அ.வி.கடன் | 5000 | |
| கொடுகழிவு | 4000 | (34000) |
| தேறிய இலாபம் | | 146,000 |

கீழ்வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளவில்லை.

அட்டுறு மின்கட்டணம் 3000 ஆகும்.

- சரியான தகவல்களை உள்ளடக்கி கீழ்வரும் வினாக்களிற்கு விடை தருக.

35. நிறுவனத்தின் 31.12.2022 இல் உள்ளபடியான விற்பனைக்கிரயம் யாது?

(1) ரூ 120,000 (2) ரூ 130,000 (3) ரூ 220,000 (4) ரூ 115,000

36. நிறுவனத்தின் 31.12.2021இல் உள்ளபடி மொத்த இலாபம் யாது?;

(1) ரூ105,000 (2) ரூ 170,000 (3)ரூ 120,000 (4) ரூ 100,000

37. 31.12.2021 இல் நிலைய நிர்வாக செலவின் கூட்டுத் தொகை யாது?

(1) ரூ 12000 (2) ரூ 8000 (3)ரூ5000 (4)ரூ 13000

38. நிறுவனத்தின் 31.12.2021 இல் சரியான தேறிய இலாபம் யாது?

(1) ரூ 83000 (2)ரூ 146,000 (3) ரூ 96000 (4) ரூ 120000

39. 31.12.2022 இல் உள்ளபடியான உரிமையாண்மை யாது?

(1) ரூ 176000 (2) ரூ 93000 (3) ரூ 80000 (4) ரூ 163000

40. அட்டுறு மின்கட்டணத்திற்கான பொருத்தமான இரட்டைப்பதிவு?

(1) அட்டுறு மின்கட்டணக் கணக்கு - வரவு 3000
மின் கட்டணக் கணக்கு - செலவு 3000

(2) மின் கட்டணக் கணக்கு - வரவு 3000
அட்டுறு மின்கட்டணக் கணக்கு - செலவு 3000

(3) மின்கட்டணக் கணக்கு - வரவு 5000
அட்டுறு மின்கட்டணக் கணக்கு - செலவு 5000

(4) மின் கட்டணக் கணக்கு - வரவு 3000
காசுக் கணக்கு - செலவு 3000